முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, கிண்டி, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் – திரு.இரா. செல்வதுரை,பி.இ.,(ஹானர்ஸ்) எம்.இ.,

செயல்முறை ஆணை எண். 6110 / நிர்.4(1) / 2019 , நாள்.06.01.2025

| | |
|---|---|
| க.கு.பொ. | |
| து.க.க.பொ. | 13/01/25 |
| ஆட்சி அலுவலர் | |
| மு.நி.வ.தொ.அ. | |

பொருள் : பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தொகுதி– IIA பணி – 2017 – 2018 காலத்திற்கான காலிப் பணியிடங்கள் – உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் – திருமதி.மு. ஸ்ரீவித்யா, உதவியாளர் – இனம் குறித்த உண்மைத் தன்மை அறிக்கை பெறப்பட்டது – உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்.

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை, கடிதம் எண். 6026 / பி.எஸ்.டி–டி1 / 2018, நாள் 02.04.2019.
2. முதன்மை இயக்குநர் (நெ) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.6110 / நிர்.3(1) / 2019, நாள்.22.04.2019.
3. முதன்மை இயக்குநர் (நெ) சென்னை அவர்களின் கடித எண்.6110 / நிர்.3(1) / 2019 , நாள்.02.09.2020, 18.03.2022 (ம) 01.09.2022.
4. தமிழ்நாடு மாநில கூர்ந்தாய்வு குழு செயல்முறை ஆணை எண்.9177/CV-2(2)/2019-11, நாள்.30.10.2024.

---

பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதம் தொகுதி– IIA பணியின் கீழ் 2017 – 2018 காலத்திற்கான உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தனியருக்கு, பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையில், தனியரின் பணிநியமனம் அவரது இனம் குறித்த உண்மைத் தன்மை தமிழ்நாடு மாநில கூர்ந்தாய்வு குழுவிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் முடிவுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன், உதவியாளராக பணி நியமனம் செய்து உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படி, தனியர் கீழே அட்டவணையில் (கலம் 2–ல் குறிப்பிட்டுள்ள நாள்) குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணியில் சேர்ந்துள்ளார்.

| பதிவு எண் / பெயர் / பிறந்த தேதி<br><br>திருவாளர்கள் | உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 260518023<br>மு. ஸ்ரீவித்யா<br>25.03.1992 | 15.05.2019 மு.ப | 15.05.2019 மு.ப | திருநெல்வேலி (நெ) ந(ம)கி.சா., வட்ட அலுவலகம். |

இந்நேர்வில் பார்வை 4–ல் காணும் தமிழ்நாடு மாநில கூர்ந்தாய்வு குழு செயல்முறை ஆணை எண்.9177/CV-2(2)/2019-11, நாள்.30.10.2024–ல் திருமதி.மு. ஸ்ரீவித்யா (பிறந்த தேதி.25.03.1992) அவர்களின் சாதிச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள இனம் உண்மையானது என உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, அவரது பெயருக்கெதிரே உதவியாளராக பணியேற்பு செய்த நாள் முதல் தேர்வாணையக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கீழ்கண்ட நிபந்தனைகளை உள்ளடக்கி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs (if any) pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group-IIA Services for the year 2017–18 recruitment".

மேலும், தற்போது வழங்கப்படும் பணி வரன்முறை உத்தரவின் அடிப்படையில் உதவியாளர் பதவியின் முதுநிலையில் எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது.

பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்றாண்டுக்கால பணிக் காலத்தில் இரண்டாண்டுக்காலம் தகுதிகாண் பருவமாக வைக்கப்படும் எனவும், தகுதிகாண் பருவம் முடிப்பதற்கு அரசாணை (நிலை) எண். 55 / பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம் (B) துறை / நாள்.17.4.2012-ன்படி நெடுஞ்சாலைத்துறையில் நேரடி நியமனம் மூலம் உதவியாளர் பணிநியமனம் செய்யப்படும் தனியர்கள் கீழ்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

(i) பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்து தேர்ச்சி பெறவேண்டும்.

(ii) நெடுஞ்சாலைத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

(iii) தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

இரா. செல்வதுரை
முதன்மை இயக்குநர்
நெடுஞ்சாலை.

பெறுநர்
திருமதி. மு. ஸ்ரீவித்யா, உதவியாளர்,
திருநெல்வேலி (நெ) ந(ம)கி.சா., வட்ட அலுவலகம்,
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), ந(ம)கி.சா., திருநெல்வேலி மூலமாக

நகல் –
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
2. தலைமைப் பொறியாளர் (நெ) ந(ம)கி.சா., சென்னை–25..
3. கண்காணிப்புப் பொறியாளர் (நெ), ந(ம)கி.சா., திருநெல்வேலி.

//உண்மை நகல் //உத்தரவின்படி /அனுப்பப்படுகிறது//

ப.ஸாவண்யா
06.01.2025
கண்காணிப்பாளர்.

மேற்குறிப்பாணை எண்: 7/2025 / அ. / நாள்: 22.01.2025

அனுப்பப்படுகிறது

6/1/25

22/1/25
அ.

22/1/2025
ஆ.அ

22/01/25
தூ.க.கா.பொ(நெ)

பெறுநர்:-
திருமதி.மு. ஸ்ரீவித்யா, உதவியாளர் (நெ)